| யா / கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் | | |
|---|---|---|
| முதலாந் தவணைப்பரீட்சை - 2018 | | |
| தரம் - 07 | செயன்முறைத் தொழிநுட்பத் திறன் | நேரம் : 2 மணித்தியாலம் |

சுட்டெண் :- .......................

## பகுதி I

01. பயிர்ச் செய்கைக்கு இன்றியமையாத அடிப்படைக் காரணி எது?
    1) சூரிய ஒளி 2) நீர் 3) மண் 4 பசளை

02. நாற்று மேடையில் இடப்பட்டு களத்தில் நடப்படும் பயிர்களில் ஒன்று
    1) போஞ்சி 2) தக்காளி 3) பயற்றை 4) பாகல்

03. நிலக்கீழ்த் தண்டுத் துண்டங்களிலிருந்து நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியது
    1) மஞ்சள் 2) மரவள்ளி 3) கத்தரி 4) பூசணி

04. முற்பரிகரிப்பு முறைகளில் ஒன்று
    1) உப்பிடல் 2) எலுமிச்சைப் பழச்சாறு சேர்த்தல்
    3) காரம் சேர்த்தல் 4) நீரில் அவித்தல்

05. தானியங்களில் உள்ள கல், மண் போன்றவற்றை அகற்றுதலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணம்
    1) அரிதட்டு 2) வடிகட்டி 3) அரிசட்டி 4) கொலண்டர்

06. இலத்திரனியல் துணைக் கூறுகளில் அடங்குவது
    1) உலர்கலம் 2) தடையி 3) கொள்ளளவி 4) ரீட் ஆளி

07. மின்குமிழின் மூலம் மின்சக்தி எச்சக்தியாக மாற்றப்படும்
    1) ஒலிச்சக்தி 2) வெப்பசக்தி 3) பொறிமுறைச் சக்தி 4) ஒளிச்சக்தி

08. மின்னோட்டத்தை கட்டுப்படுத்த பயன்படுவது
    1) கொள்ளளவி 2) தடையி 3) குமிழ்ச்செருகி 4) ஆளி

09. தடைப்பெறுமானம் எவ் அளவீட்டினால் குறித்துக் காட்டப்படும்
    1) வோல்ற் 2) அம்பியர் 3) ஓம் 4) மீற்றர்

10. கொள்வனவாளர்களும், வழங்குணர்களும் ஒன்று கூடும் இடம்
    1) கடை 2) சந்தை 3) மைதானம் 4) நடைபாதை

11. அண்மைக் காலத்தில் பணக்கொடுக்கல், வாங்கல்களுக்கு கூடுதலாக பயன்படுத்தப்படுவது

1) இலத்திரனியல் அட்டைகள் 2) காசோலை

3) தாள் குற்றி நாணயம் 4) உண்டியல்

12. இலங்கைக்கான பொருட்களின் தரத்தை நிர்ணயிக்கும் குறியீடு

1) SLR 2) ISO 3) SLS 4) MMR

13. மிளகுடன் கலப்படம் செய்யும் பொருள்

1) உழுந்து 2) பயறு 3) குரக்கன் 4) பப்பாசிவிதை

14. மனித நாகரிகத்துடன் இணைந்த கலைத்துவம்மிக்க விஞ்ஞான பூர்வமான துறை

1) சித்திரம் 2) நடனம் 3) தரையலங்கரிப்பு 4) ஓவியம்

15. சிதைவடையாத கழிவுகளுள் அடங்குவது

1) இலை 2) காய்கனித்தோல் 3) உணவுக்கழிவுகள் 4) பொலித்தீன்

16. நாற்றுச் சாடியின் அடியில் துவாரம் இடுவதன் நோக்கம்

1) காற்றோட்டத்திற்கு 2) வேர்விடச் செய்தல்

3) மேலதிக நீர் வெளியேற 4) பசளை இடுவதற்கு

17. மழை நீரினால் மண்ணின் வளமான மேற்படை கருவி அகற்றப்படல்

1) உக்கல் 2) மண்ணரிப்பு 3) மண்வளம் 4) மண்துணிக்கை

18. ஆரோக்கிய வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ள எவ்வகையான உணவை நுகர வேண்டும்.

1) சுவையான உணவு 2) விலையுயர்ந்த உணவு

3) துரித உணவு 4) தரமான உணவு

19. வழங்குனர்கள் நியாயமற்ற முறையில் இலாபத்தை ஈட்டும் வழிமுறைகள் அழைக்கப்படுவது

1) கேள்வி 2) நிரம்பல் 3) சந்தைப்பாங்கு 4) சந்தை மோசடி

20. தரை அலங்கரிக்கப்படுவதன் நோக்கங்களில் ஒன்று

1) வருமானம் பெறுவதற்கு 2) உளத்திருப்தியைப் பெறல்

3) போட்டியை ஏற்படுத்துவதற்கு 4) இடத்தை நிரப்புவதற்கு

(20X1=20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஏனைய வினாக்களுள் இரண்டைத் தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.**

01)

1) நீங்கள் இம் முறை செய்த செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.
2) இதற்கு பயன்படுத்திய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் எவை?
3) இச் செயற்பாட்டிற்கு தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?
4) எதிர் கொண்ட சவால்கள் எவை?
5) செயற்பாடு பூரணத்துவப்படுத்தப்பட்ட போது உங்கள் மனதில் தோன்றிய விடயம் என்ன?

(5X2=10 புள்ளிகள்)

02)

1) மண்ணரிப்பைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்படும் தடைகள் எவை?
2) பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் அனுகூலங்கள் இரண்டு தருக?
3) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் 3R எண்ணக்கருக்களும் எவை?
4) வித்துக்களை தயார்படுத்தும் இரு முறைகளும் எவை?
5) நாற்றுச்சாடிகளாக பயன்படுத்தக் கூடிய பொருட்கள் நான்கு தருக?

(5X2=10 புள்ளிகள்)

03)

1) உணவு சமைப்பவர் பின்பற்ற வேண்டிய நடை முறைகள் நான்கு தருக.
2) மின்சக்தியால் இயங்கும் சமையலறை உபகரணம் இரண்டு குறிப்பிடுக.
3) மின் கட்டுப்பாட்டுத் துணைக்கூறுகள் இரண்டு தருக.
4) உலர்கலம், மின்மோட்டர் ஆகியவற்றின் குறியீட்டினை வரைந்து காட்டுக.
5) சமையலறை கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் இரண்டு தருக.

(5X2=10 புள்ளிகள்)

04)

1) பொருட்களை கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
2) சந்தை மோசடிகள் இரண்டு தருக.
3) தரையலங்கரிப்பு திட்டத்தை ஆக்கப் பயன்படுத்தப்படும் கேத்திர கணித வடிவமைப்புக்கள் நான்கு தருக.
4) தரையலங்கரிப்பில் பயன்படுத்தப்படும் மென் கூறுகள் நான்கு எழுதுக.
5) உணவிற்கான தரச்சான்றிதழ் வழங்கும் பணியகத்தின் பெயர் யாது?

(5X2=10 புள்ளிகள்)

12. இலங்கையின ...

1) SLR 2) ...

13. ...

1) ... 2) ...

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page